# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THILAI MAALAI DATED 11.05.2025


RNI No. PONBIL/2021/82208

Email: thillaimaildaily@gmail.com

THILLAI MAIL

தில்லை மெயில்

மலர் : 4 இதழ் : 328
VOLUME: 4 ISSUE: 328

தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு

புதுச்சேரி (11-5-2025) ஞாயிற்றுக்கிழமை
PUDUCHERRY(11-5-2025) SUNDAY

செய்திக்கு:94426 34795


# சிருஷ்டி பவுண்டேஷன் ஆட்டிசம் பயிற்சி நிறுவனத்திற்கு கல்லூரி மாணவர்கள் களப்பயணம் மேற்கொண்டனர்



புதுச்சேரி, மே 11–

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி உயிர்வேதியியல் துறை மாணவர்கள் சமுதாய பணி பயிற்சியின் இறுதி நிகழ்வாக சிருஷ்டி பவுண்டேஷனில் மாணவர்கள் பல்வேறு செயல்பாடுகளை அறிதல் தொடர்பான நிகழ்வில் பங்கேற்றனர்.

சிருஷ்டி பவுண்டேஷனின் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் வரவேற்றார்.

இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி புதுச்சேரி சேர்மேன் லட்சுமிபதி, பொருளாளர் பாஸ்கரன், நிர்வாகக் குழு உறுப்பினர் அய்யனார் மற்றும் யூத் ரெட் க்ராஸ் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அருண் நாகலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர், சிருஷ்டி அறக்கட்டளை தலைவர் கார்த்திக் அறக்கட்டளையின் பணிகளைப் பற்றி உரையாற்றினார். உதவி பேராசிரியர்கள் வரலட்சுமி, தாரஹேஸ்வரி வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள் சமூக ஈடுபாட்டு திட்டத்திற்காக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியால் ஏற்பாடு செய்யப்பட்ட சிருஷ்டி ஆட்டிசம் கிராமத்தை பார்வையிட்டனர்

மாணவர்கள் ஆட்டிசம் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் வாய்ப்பளிக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சியை ரெட் க்ராஸ் சொசைட்டி ஏற்பாடு செய்து இருந்தது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினரான புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு, தனது மனைவியுடன் அறக்கட்டளையைப் பார்வையிட்டார். அப்போது துணைவேந்தர் அறக்கட்டளையின் பணிகளைப் பாராட்டினார். மேலும் ஆட்டிசம் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

நாள் முழுவதும், மாணவர்கள் பைகள் மற்றும் பாய்கள் தயாரித்தல், கால்நடை பண்ணைகளைப் பார்வையிடுதல், குளம் கட்டுமானத்தில் பங்கேற்பது மற்றும் தோட்ட வேலைகளுக்கு உதவுதல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் மூலம், ஆட்டிசம் உள்ள நபர்களைப் புரிந்துகொள்வதிலும் கையாள்வதிலும் மாணவர்கள் மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பெற்றனர். ஆட்டிசம் ஸ்பெக்ட்ரமில் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது பொறுமை, நிதானம், பரிவு மற்றும் தெளிவான தகவல்தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் கற்றுக்கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி செய்து இருந்தது.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

VETTRI KURAL DATED 11.05.2025

RNI : PONTAM/00585

வெற்றிக் குரல்
VETTRI KURAL

நிறுவனர், ஆசிரியர் : வி.தங்கப்பிரகாசம், வாட்ஸ்அப் எண்: 86808 25919

vettrikural@gmail.com
86808 25919

புதுச்சேரி 11-5-2025 ஞாயிற்றுக்கிழமை • மலர் 2 இதழ் 55 • PUDUCHERRY 11-5-2025 SUNDAY • VOL: 2 ISSUE: 55 • 4 PAGES Rs. 6

ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ்
MAX Life Insurance
ரிலையன்ஸ் லைப் இன்சூரன்ஸ்
ஆலோசனை மற்றும் சேமிப்பு தேவைக்கு அழைக்கவும்
M.முருகன்
9786222003, 9443494775

வெற்றிக் குரல்
செய்தி மற்றும்விளம்பரத்திற்கு
தொடர்பு கொள்ள
CELL: 86808 25919
94865 37526

# சிருஷ்டி பவுண்டேஷன் ஆட்டிசம் பயிற்சி நிறுவனத்திற்கு புதுவை பல்கலை. சமுதாய கல்லூரி மாணவர்கள் களப்பயணம்







**புதுச்சேரி, மே 11-** புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி உயிர்வேதியியல் துறை மாணவர்கள் சமுதாய பணி பயிற்சியின் இறுதி நிகழ்வாக சிருஷ்டி பவுண்டேஷனில் மாண வர்கள் பல்வேறு செயல்பாடுகளை அறிதல் தொடர்பான நிகழ்வில் பங்கேற்றனர்.

சிருஷ்டி பவுண்டேஷனின் கருத்தரங்கக் கூடத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில் புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) பேராசிரியர் லலிதா ராமகிருஷ்ணன் வரவேற்புரை வழங்கினார். இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி புதுச்சேரி சேர்மேன் டாக்டர் லட்சுமிபதி, பொருளாளர் பாஸ்கரன், நிர்வாகக் குழு உறுப்பினர் அய்யனார் மற்றும் யூத் ரெட் க்ராஸ் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அருண் நாகலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர், சிருஷ்டி அறக்கட்டளை தலைவர் கார்த்திக் அனைவரையும் வரவேற்று அறக்கட்டளையின் பணிகளைப் பற்றி உரையாற்றினார். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் வரலட்சுமி மற்றும் முனைவர் தாரஹேஸ்வரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள் சமூக ஈடுபாட்டு திட்டத்திற்காக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியால் ஏற்பாடு செய்யப்பட்ட சிருஷ்டி ஆட்டிசம் கிராமத்தை பார்வையிட்டனர்

மாணவர்கள் ஆட்டிசம் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் வாய்ப்பளிக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சியை ரெட் க்ராஸ் சொசைட்டி ஏறபாடு செய்து இருந்தது. மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பி. பிரகாஷ் பாபு, தனது மனைவியுடன் அறக்கட்டளையைப் பார்வை யிட்டார். துணைவேந்தர் அறக்கட்டளையின் பணிகளைப் பாராட்டினார், மேலும் மிகுந்த ஆர்வத்துடன், சிருஷ்டி அறக்கட்டளையின் அனைத்து பிரிவுகளையும் பார்வையிட்டபோது, ஆட்டிசம் மாணவர்களுடன் கலந்துரையாடினார். துணைவேந்தர் அவர்களுக்கு சிருஷ்டி அறக்கட்டளை, சமுதாயக் கல்லூரி மற்றும் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சார்பாக சிறப்பு செய்யப்பட்டது.

நாள் முழுவதும், மாணவர் கள் பைகள் மற்றும் பாய்கள் தயாரித்தல், கால்நடை பண்ணைகளைப் பார்வையிடுதல், குளம் கட்டுமானத்தில் பங்கேற்பது மற்றும் தோட்ட வேலைகளுக்கு உதவுதல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் மூலம், ஆட்டிசம் உள்ள நபர்களைப் புரிந்துகொள்வதிலும் கையாள்வதிலும் மாணவர்கள் மதிப்புமிக்க நுண்ணறிவுகளைப் பெற்றனர். ஆட்டிசம் ஸ்பெக்ட்ரமில் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது பொறுமை, நிதானம், பரிவு மற்றும் தெளிவான தகவல்தொடர்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் கற்றுக்கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி செய்து இருந்தது.